**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No:159/2024**

**Deposition of Witnesses for PW7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இராமசந்திரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 15.10.2025

1,2 **எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.3ம் எதிரி ஆஜர் இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது இராமநாதபுரம் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.11.2023 ம் தேதி தொண்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை 9.30 மணியளவில் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விஷ்ணு அவர்களுக்கு MR பட்டினம் கிராம நிர்வாக அலுவலர் திரு . செந்தில் குமார் அவர்களிடம் இருந்து கிடைத்த தகவலை பெற்று சார்பு ஆய்வாளர் அவர்கள் மேல் அதிகாரி அவர்களுக்கு மேற்படி சம்பவம் குறித்து தகவல் தெரிவித்து விட்டு சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை உடன் அழைத்துக்கொண்டு MR பட்டினம் ஊருக்கு வடக்கே கடற்கரை ஓரத்தில் அரசு புறம்போக்கு இடத்திற்கு சென்ற போது அங்கு முன்னால் நின்ற VAO செந்தில்குமார் , தலையாரி பாலமுருகன் வருவாய் ஆய்வாளர் சிதம்பரம் மற்றும் திருவாடணை துணை வட்டாச்சியர் திரு பாலமுருகன் அவர்கள் நாங்கள் செல்வதற்கு முன் அங்கு இருந்தார்கள் அந்த இடத்தில் TN38 BZ 3420 என்ற எண் கொண்ட Boliro pickup வாகனத்தில் மீண் கொண்டு செல்லும் ஊதா நிற 5 பெட்டிகள் மறைத்து அந்த பெட்டிகளுக்கு உள்புறமாக 3 சனல் சாக்குகளில் பொட்டலங்கள் கட்டி இருந்தது. அதை ஒரு சாக்குபிடி அவிழ்த்து பார்த்த போது ஒரு வித நெடியுடன் கூடிய கஞ்சா என்பது தெரிந்தது. மேற்படி சாக்கு மூடைகளை

சார்பு ஆய்வாளர் கொண்டு சென்ற தராசில் எடைபோட்டு பார்க்க ஒரு சாக்கில் கஞ்சாவின் எடை 35 கிலோ வீதம் 3 சாக்கு மூடைகளில் 105 கிலோ இருந்தது. அந்த இடத்தில் சார்பு ஆய்வாளர் அவர்கள் வருவாய் ஆய்வாளர் திரு சிதம்பரம் கிராம உதவியாளர் திரு பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்தார் , மேற்படி அத்தாட்சியில் மேற்படி வருவாய் ஆய்வாளர் திரு சிதம்பரம் கிராம உதவியாளர் திரு பாலமுருகன் ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்று வழக்கின் தடய சொத்துகளுடன் காவல் நிலையம் வந்து 13.00 மணிக்கு VAO திரு செந்தில் குமார் அவர்கள் கொடுத்த புகார் மனுவின் சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நானு அவர்களுக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க விபரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை:–**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.